# கோவை நகரில் நாய்கள் ஜாக்கிரதை

## நாய்கள் ஜாக்கிரதை....

பல வீடுகளின் வெளிகேட்டுகளில் இந்த அறிவிப்பு பலகைகளை பார்க்கலாம். இங்கே நாய்கள் பாதுகாப்புக்கு இருக்கின்றன. கவனம் தேவை என்று எச்சரிப்பதற்காகவே இந்த பலகை. ஆனால் தெரு முழுக்க யாரை கடிப்போம் என்று திரியும் நாய்களுக்கு யார் எச்சரிக்கை பலகை வைப்பதாம்?

கோவை மாநகரில் திரும்பிய இடத்தில் எல்லாம் நம் கண்களில் படுவது தெருநாய்கள்தான். கூட்டம் கூட்டமாக அங்குமிங்கும் செல்வது, நடுரோட்டில் ஹாயாக படுத்து உறங்குவது, சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள்களில் செல்பவர்களை துரத்தி துரத்தி கடிப்பது, தனியாக நடந்து செல்லும் மாணவர்கள் மற்றும் குழந்தைகளை துரத்துவது, குப்பையில் போடப்பட்ட கழிவுகள், செத்தபிராணிகள் ஆகியவற்றை இழுத்து வந்து தெருவில் போடுவது இந்த பிராணிகளுக்கு விளையாட்டு.

இதுகுறித்து கோவை மாநகர மக்கள் சிலரின் கருத்து வருமாறு:-

### ஆயிரக்கணக்கான தெரு நாய்கள்

**சம்பத் (ராமநாதபுரம்):-** தொழில் நகரமான கோவையில் இரவு நேரமும் பெரும்பாலான நிறுவனங்கள் செயல்பட்டு வருவதால், ஒரு சில தொழிலாளர்கள் இரவு நேரத்தில் பணி முடிந்து வீட்டுக்கு செல்கிறார்கள். அப்போது சுதந்திரமாக நடமாடும் தெருநாய்களால் சொல்ல முடியாத அளவுக்கு தொல்லை ஏற்பட்டு வருகிறது. இருசக்கர வாகனங்களில் சென்றால் வாகனத்துக்கு குறுக்கே விழுவது, காரில் சென்றாலும் கார் மீது பாய்வது, காரை விட்டு இறங்கினால் காருக்குள் ஏறுவதுபோன்ற செயல்களை செய்வதால் காரில் வந்திறங்கும் வசதி படைத்தவர்களும் கூட தெருநாய்களால் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகிறார்கள்.

இந்த தெரு நாய்களை கட்டுப்படுத்த மாநகராட்சி பல்வேறு நடவடிக்கை எடுத்தாலும் தொல்லை அதிகரிக்கத்தான் செல்கிறது. கோவை மாநகர பகுதியில் ஆயிரக்கணக்கான தெருநாய்கள் இருப்பதாக கூறப்படுகிறது. அதில் 50 சதவீத நாய்களுக்கு மட்டுமே கருத்தடை செய்யப்பட்டு உள்ளதால் மீதமுள்ள நாய்களால் நாய்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே செல்கிறது.

### கடும் நடவடிக்கை

வெளிநாடுகளில் நாய்களுக்கு உரிமம் எடுக்க வேண்டும் என்ற விதிமுறையும், கண்டிப்பாக நாய்களுக்கு கருத்தடை செய்திருக்க வேண்டும் என்ற உத்தரவும் இருப்பதால் வெளிநாடுகளில் நாய்கள் பெருகுவதில்லை. அத்துடன் தெருவிலும் விடப்படுவது இல்லை. ஆனால் நமது நாட்டில் அதற்கு எதிர்மாறாக இருக்கிறது. இங்கும் இதுபோன்ற சட்டங்கள் இருந்தும் அதை யாரும் கடைபிடிக்காமல் இருப்பதே இதற்கு முக்கிய காரணம். எனவே தெருநாய்கள் விஷயத்தில் மாநகராட்சி கடும் நடவடிக்கை எடுத்தால்தான் அதை கட்டுப்படுத்தி, அதன் தொல்லையில் இருந்து மக்களை காப்பாற்ற முடியும். எனவே அந்த நடவடிக்கையில் மாநகராட்சி அதிகாரிகள் ஈடுபட வேண்டும்.

**பிரசாத் (பூசாரிபாளையம்):-** கோவை பூசாரிபாளையம், வீரகேரளம், வேடப்பட்டி பகுதிகளில் ஏராளமான தெருநாய்கள் கூட்டம் கூட்டமாக சுற்றி திரிகின்றன. குறிப்பாக இரவு நேரத்தில் நடுரோட்டில் தெருநாய்கள் படுத்து தூங்குவதால் அந்த வழியாக நடந்து செல்லும் பொதுமக்களும், இருசக்கர வாகன ஓட்டிகளும் மிகவும் அவதி அடைந்து வருகிறார்கள். கோவையில் இருந்து வேடப்பட்டி செல்லும் தொண்டாமுத்தூர் ரோட்டில் இரவு நேரத்தில் போதிய மின்விளக்கு வசதி இல்லாததாலும், நடுரோட்டில் சுற்றி திரியும் தெருநாய்களால் இருசக்கர வாகனங்களில் செல்லும் வாகன ஓட்டிகள் கடும் அவதிப்படுகிறார்கள். நாய்கள் தூரத்தி வருவதால் இருசக்கர வாகனங்களில் செல்வோர் தடுமாறி கீழே விழுந்து காயம் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது.

இது குறித்து மாநகராட்சி அதிகாரிகள் கூறியதாவது:-

கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு நாய்கள் அதிகரித்தால் அதை பிடித்துக் கொல்லும் நிலை இருந்தது. இதனால் அதன் தொந்தரவு கட்டுப்படுத்தப்பட்டது. தற்போது நாய்கள் பாதுகாப்பு சங்கங்கள் அதிகம் இருப்பதால் அவர்கள் நாய்களை கொல்வதற்கு எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள். பெருகி வரும் தெரு நாய்களை கட்டுப்படுத்த வேறு வழி இல்லாததால்தான் அதன் எண்ணிக்கை பெருகி வருகிறது.

### பாதுகாக்க முடியும்

இருந்தாலும் மாநகராட்சியில் நாய்களை பிடிக்க 2 வாகனங்கள் இருக்கிறது. அந்த வாகனங்கள் மூலம் தெருவில் சுற்றித்திரியும் நாய்களை பிடித்து, அதற்கு கருத்தடை செய்து, அதற்கு காதில் அடையாளம் வைத்து மீண்டும் பிடித்த இடத்திலேயே விட்டு விடுகிறோம். தெருநாய்கள் தொல்லையை கட்டுப்படுத்துவதில் பொதுமக்களும் முன்வர வேண்டும். வீட்டில் வளர்க்கும் நாய்களை தெருவில் விடுவதை தவிர்த்து, சுற்றுச் சுவருக்குள் வைக்க வேண்டும். அதற்கு சரியான உணவுகளை கொடுத்து, வளர்க்க வேண்டும். வீட்டில் வளர்க்கும் நாய்களை வெளியில் விட்டு குப்பை தொட்டிகளுக்குள் விளையாட விடக்கூடாது. முக்கியமாக கருத்தடை செய்தால் அதன் எண்ணிக்கை பெருகாது. அதற்கு பொதுமக்கள் உதவியாக இருக்க வேண்டும்.

இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

நாய்கள் தொல்லையில் இருந்து மக்களை எப்படி பாதுகாப்பது? என்பது குறித்து கோவையில் உள்ள மிருகங்கள் பாதுகாப்பு மைய நிர்வாக அறங்காவலர் **மினி வாசுதேவன்** கூறியதாவது:-

தெருநாய்களை கொல்வதால் மட்டுமே அதன் எண்ணிக்கையை கட்டுப்படுத்த முடியும் என்று கருதி விட முடியாது. மாறாக மாநகர பகுதியில் கழிவுகளை கொட்டாமலும், நாய்களுக்கு கருத்தடை செய்தால் மட்டுமே நாய்களின் நடமாட்டத்தை கட்டுப்படுத்தி, அதன் மூலம் ஏற்படும் தொல்லையையும் குறைக்க முடியும். அவற்றில் இருந்து மக்களையும் பாதுகாக்க முடியும்.



கோவை ஆவாரம்பாளையம் பகுதியில் சுற்றித்திரியும் நாய்கள் கூட்டம்.



மினி வாசுதேவன்

### தடுப்பூசி மருந்து

மேலும் நாய்களுக்கு கருத்தடை செய்வதற்கு மாநகராட்சி சரியாக ஒத்துழைப்பு வழங்குவது இல்லை. ஒரு நாய்க்கு கருத்தடை செய்யும்போது, அதற்கு ஆபரேஷன் செய்ததுடன், வெறிநோய் தடுப்பு ஊசியும் போட வேண்டும். இதற்கு குறைந்தது ரூ.700 செலவு ஆகும். ஆனால் மாநகராட்சி ஒரு நாய்க்கு ரூ.450 தான் வழங்குகிறது. மேலும் சுத்தமாகவும், சுகாதாரமாகவும் தெருக்களை பராமரிக்க வேண்டும். குவியும் குப்பைகளுக்கு குறிப்பிட்ட நேரத்தில் விடை கொடுக்க வேண்டும். கண்ட இடங்களில் குப்பைகள் மற்றும் கழிவுகளை கொட்டுவதை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இத்தகைய கழிவுகளை குறைத்தால், அதற்காக தினந்தோறும் கண்டபடி திரியும் தெருநாய்களின் எண்ணிக்கையை 100 சதவீதம் கட்டுப்படுத்திவிடலாம்.

மேலும் விலை உயர்ந்த வீட்டு நாய்களை வாங்கி வளர்ப்பது போன்று, நாட்டு நாய்களை வளர்ப்பவர்களும் அதன் பராமரிப்பில் கவனம் செலுத்த வேண்டும். உணவு விஷயத்தில் அதற்கென்று தனியாக கவனிக்க முடியாவிட்டாலும், உணவு வைக்கின்ற முறைகளில் சுகாதார முறைகளை கடை பிடிக்க வேண்டும். வீட்டை விட்டு வெளியே சென்று விடாதபடி அவற்றுக்குரிய சிகிச்சை முறைகளை கையாள வேண்டும். முறையாக அவற்றுக்கு தடுப்பூசிகளை போட வேண்டும்.

### கடுமையான நடவடிக்கை

மேலும் அவற்றுக்குரிய வயதில் கருத்தடை செய்ய வேண்டும் என்ற எண்ணமும் ஏற்பட வேண்டும். ஆனால் அவ்வாறு பலர் செய்வதில்லை. வீட்டுக்கு ஒரு நாய் வேண்டும். அது காவலுக்கு இருக்க வேண்டும். காலையில் ஊர் மேய்ந்து விட்டு, மாலையில் அல்லது இரவு வீட்டுக்கு வந்தால் போதும் என நாய்களை பெயர் சொல்லி அழைக்கும் வகையில் பெயரளவுக்கு மட்டுமே வளர்த்துவிட்டு அவற்றை தெருவில் கட்டவிழ்த்து விடுகின்றனர். இதனால் ஏற்படும் பாதிப்பை அவர்கள் உணருவதில்லை.

வெளிநாடுகளில் நாய் வளர்த்தால் அதற்கு கண்டிப்பாக உரிமம் பெற வேண்டும் என்ற சட்டம் இருக்கிறது. தெருவில் ஏதாவது ஒரு நாய் சென்றால், உடனே அந்த நாயை பிடித்து, அதன் மீது இருக்கும் உரிமத்தின் எண்ணை வைத்து அதன் உரிமையாளர் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பது அந்த நாட்டு அரசின் கடமையாக உள்ளது. இதனால் அங்கு நாய்களின் தொல்லை அறவே இல்லை. அதுபோன்று கட்டாயம் நாய்களுக்கு கருத்தடை செய்ய வேண்டும் என்ற சட்டமும் இருக்கிறது. அத்துடன் அங்கு கண்ட இடங்களில் குப்பைகளும் கொட்டுவதில்லை. கொட்டும் குப்பைகள் அப்படியே கிடப்பதில்லை. குறிப்பிட்ட நேரத்தில் எடுத்து செல்லப்படுகிறது. இதனால்தான் அங்கு தெருநாய்களின் தொந்தரவு இல்லை. இதே விதிமுறைகளை நமது நாட்டிலும் பின்பற்றினால், தெருநாய்களின் தொல்லை என்ற பேச்சுக்கே இடம் இருக்காது.

இவ்வாறு அவர் கூறினார்.

## மிருக பாதுகாப்பு அமைப்புகள் மீது புகார்

**திருநாவுக்கரசு (சமூக ஆர்வலர்):-** வீடு, தோட்டக்காவலுக்கு நாய்களை வளர்ப்பது வாடிக்கையான ஒன்று. மற்றபடி தெரு நாய்கள் தேவைஇல்லை. இதனால் பயன் என்ன? பொது மக்களுக்கு துன்பம் தான். முறையாக பராமரிக்கப்படாத நாய்கள் கடித்து சரியான சிகிச்சை இல்லாவிட்டால் சாவு நிச்சயம். முன்பு தேவை இல்லாத தெரு நாய்கள் கொல்லப்பட்டன. ஓரளவுக்கு எண்ணிக்கை கட்டுக்குள் இருந்தது. இப்போது மனிதன் செத்தாலும் பரவாயில்லை. நாய்களை கொல்லக்கூடாது என்று சில அமைப்புகள் வரிந்து கட்டிக் கொண்டு வரிசையில் நிற்கின்றன. சரி, கொல்லவில்லை. நீங்களாவது இந்த பிரச்சினையை தீர்த்துவைத்து மனிதர்களுக்கு பாதுகாப்பு கொடுங்கள். நாய்களை பராமரியுங்கள் என்றால் அதுவும் செய்வதில்லை. நாய்கடிக்கு தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை அளிப்பது இல்லை. கோவை அரசு ஆஸ்பத்திரியில் மட்டும் மாதத்துக்கு சுமார் 100 பேர் நாய்கடிக்கு சிகிச்சை பெறுகிறார்கள். இதற்கெல்லாம் இந்த பாதுகாப்பு அமைப்புகள் தான் பதில் சொல்லவேண்டும்.

### சம்பந்தம் கிடையாது

நாய்கள் பெருக்கம் குறித்து மிருக வதை தடுப்பு மற்றும் பிராணிகள் பாதுகாப்பு மைய நிர்வாகி ரூபன் கூறியதாவது:-

மிருகங்களை வதை செய்வதை யாரும் ஏற்றுக்கொள்ள முடியாது. இது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி பிராணிகள் மற்றும் பறவைகளை காப்பதே எங்கள் நோக்கம். இரக்கம் இல்லாமல் மிருகங்களை கொடுமைப் படுத்துபவர்களுக்கு தண்டனை வாங்கி கொடுத்து அவர்களை திருத்துவது தான் லட்சியம் எங்களுக்கும், நாய்கள் பெருக்கத்துக்கும் சம்பந்தம் கிடையாது. விதிகளுக்கு உட்பட்டு தெரு நாய்களை கட்டுப்படுத்தும் பொறுப்பு அது சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உள்ளது. அதைவிடுத்து எங்கள் மீது குற்றம் சுமத்துவது சரியாகாது. நாய்களை தூக்கிலிட்டும், விஷ ஊசி போட்டும், அடித்தும், விஷம் வைத்தும் துடிக்க துடிக்க கொடூரமாக கொல்லக்கூடாது என்று நாங்கள் சொல்வதற்கும், நாய்கள் கடித்து மனிதர்கள் சாவதற்கும் தொடர்பை ஏற்படுத்தக் கூடாது. இவ்வாறு அவர் கூறினார்

## வெறிநாய் கடித்தால் என்ன செய்வது?

★ வெறிநோய் பிடித்த நாய் கடித்தால்தான் ரேபிஸ் நோய் பரவும் என்பது இல்லை. இந்த நோயால் பாதிக்கப்பட்ட நாயின் உமிழ் நீர் நமது மீது பட்டாலோ அல்லது அந்த நாய் நகத்தால் பிராண்டினாலும் இந்த நோய் நமக்கு ஏற்படும்.

★ இந்த நாய் கடித்ததும் முதலுதவி செய்து கொள்வது மிகவும் நல்லது. இதற்காக நாய் கடித்த இடத்தில் சுத்தமான அதிக தண்ணீரைக்கொண்டு சுமார் 15 நிமிடங்கள் கழுவ வேண்டும். பின்பு கிருமி நாசினியோ அல்லது கார்பாக்சிலிக் ஆசிட் கலந்த சோப்பை கடிபட்ட இடத்தில் போட்டு நன்றாக கழுவ வேண்டும்.



★ கடிப்பட்ட இடம் மூளைக்கு அருகில் உள்ள இடமா என்று பார்க்க வேண்டும். மூளைக்கு அருகே உள்ள கழுத்து, முகம், தலை போன்ற பகுதி என்றால் உடனடியாக 'இம்முனோ குளோபுலின்ஸ்' என்ற தடுப்பு மருந்தையும் போட்டுக்கொள்ள வேண்டும்.

★ இந்த வகையான நாய் கடித்தும், சிகிச்சை மேற்கொள்ளாமல் இருந்தால் 30-ல் இருந்து 60 நாட்களுக்குள் கடிபட்டவர்களுக்கு தலைவலி, காய்ச்சல், பசியின்மை, வாந்தி, தண்ணீர் விழுங்க சிரமம் ஆகியவை தென்படும். அந்த நேரத்தில் உடனடியாக மருத்துவரிடம் சென்று சிகிச்சை எடுத்தால் சரியாகிவிடும்.



உக்கடத்தில் உள்ள தெருநாய் கருத்தடை மையம்.

## நாய்கள் கருத்தடை மையம் என்ன செய்கிறது?

கோவை மாநகராட்சி பகுதியில் உக்கடம் மற்றும் சிரநாயக்கன்பாளையம் ஆகிய இடத்தில் நாய்கள் கருத்தடை மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இதில் உக்கடத்தில் செயல்பட்டு வரும் கருத்தடை மையத்தில் கோவை மாநகராட்சிக்கு உட்பட்ட தெற்கு, வடக்கு, கிழக்கு மற்றும் மத்திய மண்டலத்துக்கு உட்பட்ட பகுதியில் இருக்கும் நாய்களுக்கு கருத்தடை செய்யப்படுகிறது. சீரநாயக்கன்பாளையத்தில் உள்ள மையத்தில் மேற்கு மண்டலத்தில் உள்ள நாய்களுக்கு கருத்தடை செய்யப்படுகிறது.

இந்த மையங்களில் தெருநாய்களுக்கு கருத்தடையும், தடுப்பூசியும் போடப்படுகிறது. ஒரு நாளுக்கு அதிகபட்சமாக ஆண் நாய் என்றால் 30-ம், பெண் நாய் என்றால் 20 நாய்களுக்கு கருத்தடை செய்யப்பட்டு வருகிறது.

## நாய்களை பராமரிப்பது எப்படி?

★ நாய் பிறந்து 4 மாதத்தில் இருந்து 8 மாதம் வரை 20 நாட்களுக்கு ஒருமுறையும், 8-வது மாதத்தில் இருந்து உயிரோடு இருக்கும் வரை நாயின் எடையைப்பார்த்து அதற்கு ஏற்ப பூச்சி மருந்து கொடுப்பது அவசியம்.

★ நாய்க்குட்டியில் இருக்கும் உருண்டைப்புழுவின் முட்டை நம் கைகளில் பட்டு, நமது வயிற்றுக்குள் சென்றால் உடலில் ஆங்காங்கே சின்னச்சின்ன கட்டிகள் தோன்றும். எனவே குட்டி பிறந்த 30-வது நாளில் இந்த புழு நீக்கத்துக்கான மருந்து கொடுக்க வேண்டும். பின்னர் ஒருவருடம் வரை மாதத்துக்கு ஒரு முறையும், ஒரு வருடத்துக்கு பின்பு அதன் ஆயுட் காலம் வரை 2 மாதத்துக்கு ஒருமுறையும் இந்த புழுவை நீக்க மருந்து கொடுக்க வேண்டும்.

★ நாய் கழிவுகளில் இருந்து தெள்ளுப்பூச்சி என்ற ஒருவகை பூச்சி பரவுகிறது. இந்த பூச்சி நமது வயிற்றுக்குள் செல்லும்போது மூளை, நுரையீரல் போன்ற இடங்களில் கட்டிகள் வளர வாய்ப்பு உள்ள து. எனவே நாய் வீட்டுக்குள் காலைக்கடனை முடித்தால் அதை உடனே அப்புறப்படுத்த வேண்டும்.